www.Padasalai.Net www.Trb Tnpsc.Com
www.surabooks.com

10 ஆம் வகுப்பு.

# காலாண்டுப் பொதுத் தேர்வு, செப்டம்பர் - 2019

## கணிதம் (விடைகளுடன்)

நேரம் : 2.30 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 100

அறிவுரைகள்:

(1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப் பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

### பகுதி - I

குறிப்பு : (i) இப்பிரிவில் உள்ள 14 வினாக்களுக்கும் விடையளிக்கவும். **[14 × 1 = 14]**

(ii) கொடுக்கப்பட்டுள்ள நான்கு மாற்று விடைகளில் மிகவும் பொருத்தமான விடையை தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேரத்து எழுதவும்.

(iii) ஒவ்வொரு வினாவிற்கும் 1 மதிப்பெண்.

**1.** $f(x) = (x+1)^3 - (x-1)^3$ குறிப்பிடும் சார்பானது

(a) நேரிய சார்பு (b) ஒரு கனச் சார்பு
(c) தலைகீழ் சார்பு (d) இருபடிச் சார்பு

**2.** $n(A) = p$ மற்றும் $n(B) = q$ எனில் $n(A \times B) =$ ______

(a) $p+q$ (b) $p-q$
(c) $p \times q$ (d) $\frac{p}{q}$

**3.** $x^2 - 2x - 24$ மற்றும் $x^2 - kx - 6$-ன் மீ.பொ.வ $(x-6)$ எனில் $k$-யின் மதிப்பு

(a) 3 (b) 5 (c) 6 (d) 8

**4.** கீழ்கண்டவற்றுள் எது $y^2 + \frac{1}{y^2}$ க்குச் சமம் இல்லை?

(a) $\frac{y^4+1}{y^2}$ (b) $\left(y+\frac{1}{y}\right)^2$
(c) $\left(y-\frac{1}{y}\right)^2 + 2$ (d) $\left(y+\frac{1}{y}\right)^2 - 2$

**5.** $x^2 + 3x = 0$ என்ற இருபடிச் சமன்பாட்டின் மூலங்களின் பெருக்கற்பலன்

(a) –3 (b) 3 (c) 0 (d) 1

**6.** $7^{4k} \equiv$ ______ (மட்டு 100)

(a) 1 (b) 2 (c) 3 (d) 4

**7.** $\frac{3}{16}, \frac{1}{8}, \frac{1}{12}, \frac{1}{18}, \ldots$ என்ற தொடர்வரிசையின் அடுத்த உறுப்பு

(a) $\frac{1}{24}$ (b) $\frac{1}{27}$ (c) $\frac{2}{3}$ (d) $\frac{1}{81}$

**8.** தொடர்வரிசையானது ______ கணத்தில் வரையறை செய்யப்பட்ட சார்பாகும்.

(a) மெய் எண்கள் (b) இயல் எண்கள்
(c) முழு எண்கள் (d) முழுக்கள்

**9.** $\Delta LMN$-ல், $\angle L = 60°$, $\angle M = 50°$ மேலும். $\Delta LMN \sim \Delta PQR$ எனில் $\angle R$-ன் மதிப்பு

(a) 40° (b) 70° (c) 30° (d) 110°

**10.** $\Delta ABC$-யில், $DE \parallel BC$, $AB = 3.6$ செ.மீ, $AC = 2.4$ செ.மீ மற்றும் $AD = 2.1$ செ.மீ எனில் AEயின் நீளம்

(a) 1.4 செ.மீ (b) 1.8 செ.மீ
(c) 1.2 செ.மீ (d) 1.05 செ.மீ

**11.** (–5,0) (0, –5) மற்றும் (5,0) ஆகிய புள்ளிகளால் அமைக்கப்படும் முக்கோணத்தின் பரப்பு

(a) 0 ச.அலகுகள் (b) 25 ச.அலகுகள்
(c) 5 ச.அலகுகள் (d) எதுவுமில்லை

**12.** ஒரு கோட்டின் சாய்வு 1 எனில் அக்கோட்டின் சாய்வு கோணம்

(a) 0° (b) 30° (c) 45° (d) 60°

**13.** $\tan\theta \csc^2\theta - \tan\theta$ –ன் மதிப்பு

(1) $\sec\theta$ (2) $\cot^2\theta$
(3) $\sin\theta$ (4) $\cot\theta$

**14.** 8, 8, 8, 8, 8. . . 8 ஆகிய தரவின் வீச்சு

(1) 0 (2) 1
(3) 8 (4) 3



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000
Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

## பகுதி - II

ஏதேனும் **பத்து** வினாக்களுக்கு விடையளிக்கவும்.
வினா எண் **28**-ற்கு கட்டாயமாக விடையளிக்கவும்.
ஒவ்வொரு வினாவிற்கும் 2 மதிப்பெண்கள்

**10 × 2 = 20**

**15.** $B \times A = \{(-2, 3),(-2, 4),(0, 3),(0, 4),(3, 3),(3, 4)\}$ எனில், A மற்றும் B ஆகியவற்றைக் காண்க.

**16.** '$f$' என்ற உறவானது $f(x)=x^2-2$ என வரையறுக்கப்படுகிறது. $x \in \{-2,-1, 0, 3\}$ எனக் கொண்டால் (i) $f$ –ன் உறுப்புகளைப் பட்டியலிடுக. (ii) $f$- ஒரு சார்பாகுமா?

**17.** 445 மற்றும் 572-ஐ ஒரு குறிப்பிட்ட எண்ணால் வகுக்கும் போது முறையே மீதி 4 மற்றும் 5-ஐ தரக்கூடிய மிகப்பெரிய எண்ணைக் கண்டறிக.

**18.** 16, 11, 6, 1,... என்ற கூட்டுத்தொடர் வரிசையில் –54 என்பது எத்தனையாவது உறுப்பு?

**19.** $\dfrac{x^2-16}{x^2+8x+16}$ என்ற விகிதமுறு கோவையை எளிய வடிவில் சுருக்குக.

**20.** $\dfrac{-3}{2}$ மற்றும் –1 ஆகியவை மூலங்களின் கூடுதல் மற்றும் பெருக்கற்பலன் எனில் இருபடிச் சமன்பாட்டினைக் காண்க.

**21.** $\Delta ABC$ ஆனது $\Delta DEF$ க்கு வடிவொத்தவை. மேலும் BC = 3 செ.மீ, EF = 4 செ.மீ மற்றும் முக்கோணம் ABC-யின் பரப்பு = 54 செ.மீ$^2$ எனில் $\Delta DEF$–ன் பரப்பைக் காண்க.

**22.** $\dfrac{\cos\theta}{1+\sin\theta} = \sec\theta - \tan\theta$ என்பதை நிரூபிக்கவும்

**23.** ஒரு தரவின் திட்டவிலக்கம் மற்றும் சராசரி முறையே 6.5 மற்றும் 12.5 எனில் மாறுபாட்டுக் கெழுவைக் காண்க.

**24.** ஒரு கோட்டின் சாய்வுக் கோணம் 30° எனில் அக்கோட்டின் சாய்வைக் காண்க?

**25.** $(-2, a)$ மற்றும் $(9, 3)$ என்ற புள்ளிகள் வழி செல்லும் நேர்க்கோட்டின் சாய்வு $-\dfrac{1}{2}$ எனில், $a$ –யின் மதிப்பு காண்க.

**26.** A = {1,2,3,4,5} மற்றும் B = W என்க. மேலும் $f$: A→B ஆனது $f(x) = x^2 - 1$ என வரையறுக்கப்பட்டுள்ளது. $f$ என்ற சார்பிற்கு வீச்சகம் காண்க.

**27.** ஒரு கடிகாரம் ஒரு மணிக்கு ஒரு முறை, 2 மணிக்கு இரு முறை, 3 மணிக்கு மூன்று முறை என்றவாறு தொடர்ந்து சரியாக ஒவ்வொரு மணிக்கும், ஒலி எழுப்பும் எனில் ஒரு நாளில் அக்கடிகாரம் எத்தனை முறை ஒலி எழுப்பும்?

**28.** $x^2 + 2x - 143$ என்ற இருபடிக் கோவையின் பூச்சியங்களைக் காண்க.

## பகுதி - III

ஏதேனும் **பத்து** வினாக்களுக்கு விடையளிக்கவும்.
வினா எண் **42**-ற்கு கட்டாயமாக விடையளிக்கவும்.
ஒவ்வொரு வினாவிற்கும் 2 மதிப்பெண்கள்

**10 × 5 = 50**

**29.** A ={1, 2, 3}, B = {2, 3, 5}, C = {3, 4} மற்றும் D = {1, 3, 5} எனில், $(A\cap C) \times (B\cap D) = (A\times B) \cap (C \times D)$ என்பது உண்மையா எனச் சோதிக்கவும்?

**30.** If $f(x) = 3x-2$, $g(x) = 2x + k$ மற்றும் $fog = gof$ எனில், $k$ –யின் மதிப்பைக் காண்க.

**31.** $S_1, S_2$ மற்றும் $S_3$ என்பன முறையே ஒரு கூட்டுத்தொடர் வரிசையின் முதல் $n$, $2n$, $3n$ உறுப்புகளின் கூடுதல் ஆகும். $S_3 = 3(S_2 - S_1)$ என நிறுவுக.

**32.** $6^2 + 7^2 + 8^2 + ... + 21^2$ என்ற தொடரின் கூடுதலைக் காண்க.

**33.** $3x^4 + 6x^3 - 12x^2 - 24x$, $4x^4 + 14x^3 + 8x^2 - 8x$ ஆகிய பல்லுறுப்புக் கோவைகளின் மீ.பொ.வ. காண்க.

**34.** $\dfrac{x^2}{y^2} - 10\dfrac{x}{y} + 27 - 10\dfrac{y}{x} + \dfrac{y^2}{x^2}$ என்ற கோவையின் வர்க்கமூலம் காண்க.

**35.** கோண இரு சமவெட்டி தேற்றத்தை எழுதி நிறுவுக.

**36.** A(–3, 9) , B($a$, $b$) மற்றும் C(4,–5) என்பன ஒரு கோட்டமைந்த புள்ளிகள் மற்றும் $a + b = 1$ எனில், $a$ மற்றும் $b$-யின் மதிப்பைக் காண்க.

**37.** சாய்வுக் கருத்தினைப் பயன்படுத்தி (1,–4), (2, –3) மற்றும் (4, –7) என்ற முனைப் புள்ளிகள் ஒரு செங்கோணத்தை அமைக்கும் எனக் காட்டுக.

**38.** $\sin\theta + \cos\theta = p$ மற்றும் $\sec\theta + \csc\theta = q$ எனில் $q(p^2 - 1) = 2p$ என்பதை நிரூபிக்கவும்.

**39.** 8 மாணவர்கள் ஒரு நாளில் வீட்டுப் பாடத்தை முடிப்பதற்கு எடுத்துக் கொள்ளும் காலஅளவுகள் (நிமிடங்களில்) பின்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளது. 38, 40, 47, 44, 46, 43, 49, 53. இத்தரவின் மாறுபாட்டுக் கெழுவைக் காண்க.

**40.** 2, 5, 8, 11, 14, 6, 12 மற்றும் 10 ஆகியவை 8 மாணவர்கள் ஒரு மாதத்தில் படித்த புத்தகங்களின் எண்ணிக்கை ஆகும். இவ்விவரத்திற்கு திட்டவிலக்கத்தைக் காண்க.

**41.** $5x^2 - 6x - 2 = 0$ என்ற இருபடிச் சமன்பாட்டை வர்க்கப்பூர்த்தி முறையில் தீர்க்க

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

www.surabooks.com



**42.** ஒரு பெருக்குத் தொடர் விரிசையில் 4 ஆவது மற்றும் 7 ஆவது உறுப்புகள் முறையே 54 மற்றும் 1458 எனில், பெருக்குத்தொடர் வரிசையைக் காண்க.

## பகுதி - IV

**இரு வினாக்களுக்கும் விடையளிக்கவும். ஒவ்வொரு வினாவிற்கும் 8 மதிப்பெண்கள். 2 × 8 = 16**

**43.** கொடுக்கப்பட்ட PQR–ன் ஒத்த பக்கங்களின் விகிதம் $\frac{7}{3}$ என்றவாறு ஒரு வடிவொத்த முக்கோணம் வரைக.

**(அல்லது)**

$\Delta ABC$-யில், $DE \parallel BC$, $AD = x$, $DB = x-2$, $AE = x + 2$ மற்றும் $EC = x - 1$ எனில், பக்கங்கள் AB மற்றும் AC –யின் நீளங்களைக் காண்க.

**44.** $y = x^2 + 3x - 4$-ன் வரைபடம் வரைந்து, அதனைப் பயன்படுத்தி $x^2 + 3x - 4 = 0$ என்ற சமன்பாட்டைத் தீர்க்கவும்.

**(அல்லது)**

தீர்க்க: $\frac{1}{3}(x + y - 5) = y - z = 2x - 11 = 9 - (x + 2z)$.

## விடைகள்

## பகுதி - I

1. (d) இருபடிச் சார்பு
2. (c) $p \times q$
3. (b) 5
4. (b) $\left(y + \frac{1}{y}\right)^2$
5. (c) 0
6. (a) 1
7. (b) $\frac{1}{27}$
8. (b) இயல் எண்கள்
9. (b) 70°
10. (a) 1.4 செ.மீ
11. (b) 25 ச.அலகுகள்
12. (c) 45°
13. (4) cot θ
14. (1) 0

## பகுதி - II

**15. தீர்வு :**

$B \times A = \{(-2, 3), (-2, 4), (0, 3), (0, 4), (3, 3), (3, 4)\}$

$A = \{3, 4\}, B = \{-2, 0, 3\}$

**16. தீர்வு :**

$f(x) = x^2 - 2$ இங்கு $x \in \{-2,-1,0,3\}$

(i) $f(-2) = (-2)^2 - 2 = 2;$

$f(-1) = (-1)^2 - 2 = -1$

$f(0) = 0^2 - 2 = -2$

$f(3) = 3^2 - 2 = 9 - 2 = 7$

ஆகையினால் $f = \{(-2, 2), (-1, -1), (0, -2), (3,7)\}$

(ii) $f$–ன் ஒவ்வொரு மதிப்பக உறுப்பிற்கும் ஒரே ஒரு நிழல் உரு உள்ளதைக் காணலாம். எனவே $f$-ஆனது ஒரு சார்பாகும்.

**17. தீர்வு :**

445 மற்றும் 572ஐ வகுக்கும்போது கிடைக்கும் மீதி 4 மற்றும் 5 எனில், நமக்குத் தேவையான எண் 445 – 4 = 441, மற்றும் 572 – 5 = 567 ஆகியவற்றின் மீப்பெரு பொது வகுத்தியாகத்தான் இருக்கும்.

எனவே நாம் 441 மற்றும் 567. ஆகிய எண்களின் மீ.பொ.வ கண்டறிவோம். யூக்ளிடின் வகுத்தல் வழிமுறையின்படி நாம் பெறுவது,

$567 = 441 \times 1 + 126$

$441 = 126 \times 3 + 63$

$126 = 63 \times 2 + 0$

ஆகவே 441 மற்றும் 567 ஆகியவற்றின் மீ.பொ.வ 63 ஆகும். எனவே தேவையான எண் 63 ஆகும்.

**18. தீர்வு :**

A.P = 16, 11, 6, 1, . . .

$n$ -ம் உறுப்பு = – 54 என்க

$t_n = -54$

$a = 16, d = t_2 - t_1 = 11 - 16 = -5$

$\therefore t_n = a + (n - 1)d$

$-54 = 16 + (n - 1)(-5)$

$-54 = 16 - 5n + 5$

$21 - 5n = -54$

$-5n = -54 - 21$

$-5n = -75$

$n = \frac{75}{5} = 15$

∴ 15 -ம் உறுப்பு –54 ஆகும்.

orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

www.surabooks.com



**19. தீர்வு :**

$$\frac{x^2-16}{x^2+8x+16} = \frac{(x+4)(x-4)}{(x+4)^2} = \frac{x-4}{x+4}$$

**20. தீர்வு :**

மூலங்களின் கூடுதல் $= \frac{-3}{2}$

$\alpha + \beta = \frac{-3}{2}$

மூலங்களின் பெருக்கற்பலன் $(\alpha\beta) = (-1)$

தேவையான சமன்பாடு $= x^2 - (\alpha + \beta)x + \alpha\beta = 0$

$x^2 - \left(\frac{-3}{2}\right)x - 1 = 0$

$2x^2 + 3x - 2 = 0$

**21. தீர்வு :** இரு வடிவொத்த முக்கோணங்களுடைய பரப்புகளின் விகிதமான து அவற்றின் ஒத்த பக்கங்களுடைய வர்க்கங்களின் விகிதத் திற்குச் சமம் என்பதால்

$$\frac{\Delta\text{ABC-ன் பரப்பளவு}}{\Delta\text{DEF-ன் பரப்பளவு}} = \frac{BC^2}{EF^2}$$

எனவே $\frac{54}{\Delta\text{DEF-ன் பரப்பளவு}} = \frac{3^2}{4^2}$

$\Delta$DEF பரப்பளவு $= \frac{16 \times 54}{9} = 96$ செ.மீ$^2$

**22. தீர்வு :**

$$\text{L.H.S} = \frac{\cos\theta}{1+\sin\theta}$$

(பகுதி தொகுதியை $(1 - \sin\theta)$ ஆல் பெருக்க)

$$= \frac{\cos\theta}{1+\sin\theta} \times \frac{1-\sin\theta}{1-\sin\theta} = \frac{\cos\theta - \cos\theta\sin\theta}{1-\sin^2\theta}$$

$$= \frac{\cos\theta - \cos\theta\sin\theta}{\cos^2\theta} = \frac{\cos\theta}{\cos^2\theta} - \frac{\cancel{\cos\theta}\sin\theta}{\cancel{\cos^2\theta}}$$

$$= \frac{1}{\cos\theta} - \frac{\sin\theta}{\cos\theta} = \sec\theta - \tan\theta = \text{R.H.S}$$

**23. தீர்வு :**

மாறுபாட்டுக் கெழு C.V $= \frac{\sigma}{\bar{x}} \times 100$

$\sigma = 6.5, \bar{x} = 12.5$

$\therefore$ C.V $= \frac{6.5}{12.5} \times 100\%$

$= 52\%.$

**24. தீர்வு :**

இங்கு $\theta = 30°$

சாய்வு $m = \tan\theta$

$\therefore$ சாய்வு $m = \tan 30° = \frac{1}{\sqrt{3}}$

**25. தீர்வு :** $(-2, a)$ மற்றும் $(9, 3)$ என்ற புள்ளிகளை இணைக்கும் கோட்டின் சாய்வு $m = \frac{-1}{2}$.

$$m = \frac{y_2 - y_1}{x_2 - x_1} = \frac{3-a}{9-(-2)} = \frac{-1}{2}$$

$2(3 - a) = -1\ (11)$

$\Rightarrow -2a = -11 - 6 = -17$

$a = \frac{17}{2}$.

**26. தீர்வு :** $f(1) = 0;\ f(2) = 3;\ f(3) = 8;\ f(4) = 15;\ f(5) = 24$

வீச்சு $f = \{0,3,8,15,24\}$

**27. தீர்வு :**

$S_n = 2(1 + 2 + 3 + .........+12) = 2\left(\frac{12}{2}(1+12)\right)$

ஒரு நாளில் கடிகாரம் ஒலி எழுப்பும் எண்ணிக்கை = 156 முறை.

**28. தீர்வு :**

$P(x) = (x + 13)(x - 11)$

$P(-13) = 0;\ P(11) = 0$

$P(x)$-ன் பூச்சியங்கள் $-13$ மற்றும் 11

## பகுதி - III

**29. தீர்வு :**

LHS $= (A \cap C) \times (B \cap D)$

$A \cap C = \{3\}$

$B \cap D = \{3, 5\}$

$(A \cap C) \times (B \cap D) = \{(3, 3)\ (3, 5)\}$ ...(1)

RHS $= (A \times B) \cap (C \times D)$

$A \times B = \{(1, 2), (1, 3), (1, 5), (2, 2), (2, 3), (2, 5), (3, 2), \underline{(3, 3)}, \underline{(3, 5)}\}$

$C \times D = \{(3, 1), \underline{(3, 3)}, \underline{(3, 5)}, (4, 1), (4, 3), (4, 5)\}$

$(A \times B) \cap (C \times D) = \{(3, 3), (3, 5)\}$ ...(2)

$\therefore (1) = (2)$

orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

www.surabooks.com



**30. தீர்வு :**

$$f(x) = 3x-2,\ g(x) = 2x+k$$
$$fog(x) = f(g(x)) = f(2x+k)$$
$$= 3(2x+k)-2 = 6x+3k-2$$

எனவே, $fog(x) = 6x+3k-2$

$gof(x) = g(3x-2) = 2(3x-2)+k$

எனவே, $gof(x) = 6x-4+k$

$fog = gof$ எனக் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆகையினால், $6x+3k-2 = 6x-4+k$

$6x-6x+3k-k = -4+2$ –லிருந்து $k = -1$

**31. தீர்வு :**

$S_1$, $S_2$, $S_3$ என்பன முறையே ஒரு கூட்டுத் தொடர்வரிசையின் முதல் $n$, $2n$ மற்றும் $3n$ உறுப்புகளின் கூடுதல் எனில்,

$$S_1 = \frac{n}{2}[2a+(n-1)d],\quad S_2 = \frac{2n}{2}[2a+(2n-1)d]$$
$$S_3 = \frac{3n}{2}[2a+(3n-1)d]$$

தற்போது

$$S_2 - S_1 = \frac{2n}{2}[2a+(2n-1)d] - \frac{n}{2}[2a+(n-1)d]$$
$$= \frac{n}{2}[[4a+2(2n-1)d]-[2a+(n-1)d]]$$
$$S_2 - S_1 = \frac{n}{2}\times[2a+(3n-1)d]$$
$$3(S_2 - S_1) = \frac{3n}{2}\times[2a+(3n-1)d]$$
$$3(S_2 - S_1) = S_3$$

**32. தீர்வு :**

$$6^2+7^2+8^2+\ldots+21^2$$
$$= (1^2+2^2+\ldots+21^2)-(1^2+2^2+\ldots+5^2)$$
$$= \sum_1^{21} n^2 - \sum_1^{5} n^2$$
$$= \left(\frac{n(n+1)(2n+1)}{6}\right)_{n=21} - \left(\frac{n(n+1)(2n+1)}{6}\right)_{n=5}$$
$$= \left(\frac{\cancel{21}^{7}\times\cancel{22}^{11}\times 43}{\cancel{6}_{2}}\right) - \left(\frac{5\times\cancel{6}\times 11}{\cancel{6}}\right) = 3311-55$$
$$= 3256$$

**33. தீர்வு :**

$3x^4+6x^3-12x^2-24x,\ 4x^4+14x^3+8x^2-8x$

$4x^4+14x^3+8x^2-8x = 2(2x^4+7x^3+4x^2-4x)$

$2x^4+7x^3+4x^2-4x$ ஐ $x^4+2x^3-4x^2-8x$ ஆல் வகுக்க.

$$\begin{array}{r|l} & \quad 2 \\ x^4+2x^3-4x^2-8x & 2x^4+7x^3+4x^2-4x \\ & 2x^4+4x^3-8x^2-16x \\ & (-)\ (-)\ (+)\ (+) \\ \hline & \quad 3x^3+12x^2+12x \div 3 \end{array}$$

$(x^3+4x^2+4x) \neq 0$

$x^4+2x^3-4x^2-8x$ by $x^3+4x^2+4x$ ஆல் வகுக்க

$$\begin{array}{r|l} & \quad x-2 \\ x^3+4x^2+4x & x^4+2x^3-4x^2-8x \\ & x^4+4x^3+4x^2 \\ & (-)\ (-)\ (-) \\ \hline & -2x^3-8x^2-8x \\ & -2x^3-8x^2-8x \\ & (+)\ (+)\ (+) \\ \hline & \quad 0 \end{array}$$

$(x^3+4x^2+4x) \neq 0$

∴ மீ.பொ.வ = $x^3+4x^2+4x$

$3x^4+6x^3-12x^2-24x,\ 4x^4+14x^3+8x^2-8x$

∴ இவற்றின் மீ.பொ.வ $x(x^2+4x+4)$

**34. தீர்வு :**

$$\begin{array}{r|l} & \frac{x}{y}-5+\frac{y}{x} \\ \frac{x}{y} & \frac{x^2}{y^2}-10\frac{x}{y}+27-10\frac{y}{x}+\frac{y^2}{x^2} \\ & (-)\ \frac{x^2}{y^2} \\ \hline 2\frac{x}{y}-5 & -10\frac{x}{y}+27 \\ & (+)\ -10\frac{x}{y}+25\ (-) \\ \hline 2\frac{x}{y}-10+\frac{y}{x} & 2-10\frac{y}{x}+\frac{y^2}{x^2} \\ & (-)(+)\ 2-10\frac{y}{x}+\frac{y^2}{x^2}\ (-) \\ \hline & \quad 0 \end{array}$$

$$\therefore \sqrt{\frac{x^2}{y^2}-10\frac{x}{y}+27-10\frac{y}{x}+\frac{y^2}{x^2}} = \left|\frac{x}{y}-5+\frac{y}{x}\right|$$

orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

www.surabooks.com



**35. தீர்வு :**

கூற்று:




ஒரு முக்கோணத்தின் ஒரு முனையிலிருந்து செல்லும் ஒரு நேர்கோடு, அதன் எதிர் பக்கத்தினை உட்புறமாக மற்ற இரு பக்கங்களின் விகிதத்தில் பிரிக்குமானால், அக்கோடு அமைந்த முனைக் கோணத்தினை உட்புறமாக இரு சமமாகப் பிரிக்கும்.

நிரூபணம்:

கொடுக்கப்பட்டவை : $\Delta ABC$யில், AD-யானது $\angle A$யின் உட்புற இருசமவெட்டி

நிரூபிக்க : $\frac{AB}{AC} = \frac{BD}{CD}$

அமைப்பு : AB இணையாக C வழியாக ஒரு இணைகோடு வரைக. ADயின் நீட்சியானது C வழியாகச் செல்லும் கோட்டினை E-யில் சந்திக்கிறது.

| எண் | கூற்று | காரணம் |
|---|---|---|
| 1. | $\angle AEC = \angle BAE = \angle 1$ | ஒரு குறுக்கு வெட்டியானது இரண்டு இணைகோடுகளை வெட்டுவதால் ஏற்படும் ஒன்றுவிட்ட கோணங்கள் சமம். |
| 2. | $\Delta$ ACE என்பது இரு சமபக்க முக்கோணம் AC = CE....(1) | $\Delta$ ACEயில், $\angle CAE = \angle CEA$ |
| 3. | $\Delta ABD \sim \Delta ECD$ $\frac{AB}{CE} = \frac{BD}{CD}$ | AA விதி முறைப்படி |
| 4. | $\frac{AB}{AC} = \frac{BD}{CD}$ | (1)லிருந்து AC = CE. தேற்றம் நிரூபிக்கப்பட்டது. |

**36. தீர்வு :**

$$A(-3, 9),\ B(a, b)\ C(4, -5),$$
$$\downarrow \quad \downarrow \quad \downarrow$$
$$(x_1, y_1)\ (x_2, y_2)\ (x_3, y_3)$$

இவை ஒரே கோட்டில் அமையும் புள்ளிகள் என கொடுக்கப்பட்டுள்ளது மற்றும் $(a + b = 1)$.

$\therefore$ $\Delta$ -ன் பரப்பு

$$= \frac{1}{2}\begin{vmatrix} x_1 & x_2 & x_3 & x_4 \\ y_1 & y_2 & y_3 & y_1 \end{vmatrix}$$ சதுர அலகுகள்

$$= \frac{1}{2}\begin{vmatrix} -3 & a & 4 & -3 \\ 9 & b & -5 & 9 \end{vmatrix} = 0$$

($\because$ புள்ளிகள் ஒரே கோட்டில் அமைவன)

$$(-3b - 5a + 36) - (9a + 4b + 15) = 0$$
$$(-3b - 4b) + (-5a - 9a) + (36 - 15) = 0$$
$$-7b - 14a = -21$$
$$-7(b + 2a) = -21$$
$$b + 2a = 3$$
$$(b + a) + a = 3$$
$$1 + a = 3$$
$$a = 2 \Rightarrow b = 1 - 2 = -1$$

$$\boxed{a = 2,\ b = -1}$$

**37. தீர்வு :**

A(1,–4), B(2,–3) மற்றும் C(4,–7) ஆகியன முக்கோணத்தின் முனைப் புள்ளிகள் என்க.

AB-யின் சாய்வு $= \frac{-3+4}{2-1} = \frac{1}{1} = 1$

BC-யின் சாய்வு $= \frac{-7+3}{4-2} = \frac{-4}{2} = -2$

AC-யின் சாய்வு $= \frac{-7+4}{4-1} = \frac{-3}{3} = -1$

AB-யின் சாய்வு $\times$ AC-யின் சாய்வு $= (1)(-1) = -1$

ஆகவே, AB ஆனது AC-க்கு செங்குத்தாகும். $\angle A = 90°$

எனவே, $\Delta$ ABC ஆனது செங்கோண முக்கோணம் ஆகும்.

**38. தீர்வு :**

$$p = \sin\theta + \cos\theta$$
$$p^2 = \underbrace{\sin^2\theta + \cos^2\theta}_{1} + 2\sin\theta\cos\theta$$
$$p^2 - 1 = 2\sin\theta\cos\theta$$
$$q = \sec\theta + \operatorname{cosec}\theta = \frac{1}{\cos\theta} + \frac{1}{\sin\theta}$$
$$= \frac{\sin\theta + \cos\theta}{\sin\theta\cos\theta}$$
$$\therefore \text{ L.H.S } q(p^2 - 1) = \frac{\sin\theta + \cos\theta}{\cancel{\sin\theta\cos\theta}} \times 2\cancel{\sin\theta\cos\theta}$$
$$= 2(\sin\theta + \cos\theta)$$
$$= 2p = \text{R.H.S}$$

orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com
www.surabooks.com



**39. தீர்வு :**

சராசரி $= \bar{x} = \frac{\Sigma x}{n}$

$= \frac{38+40+47+44+46+43+49+53}{8}$

$= \frac{360}{8}$

$= 45$

$\sigma = \sqrt{\frac{\Sigma d^2}{n}} = \sqrt{\frac{164}{8}} = \sqrt{20.5}$

$= 4.53$

மாறுபாட்டுக் கெழு

$\text{C.V.} = \frac{\sigma}{\bar{x}} \times 100 = \frac{4.53}{45} \times 100 = 10.07\%$

| $x$ | $d = x - \bar{x}$ | $d^2$ |
|---|---|---|
| 38 | –7 | 49 |
| 40 | –5 | 25 |
| 47 | 2 | 4 |
| 44 | –1 | 1 |
| 46 | 1 | 1 |
| 43 | –2 | 4 |
| 49 | 4 | 16 |
| 53 | 8 | 64 |
| 360 | 0 | 164 |

**40. தீர்வு :** $\Sigma x = 68$ ; $\Sigma x^2 = 690$

$\sigma = \sqrt{\frac{\Sigma x^2}{n} - \left(\frac{\Sigma x}{n}\right)^2}$

$\sigma = \sqrt{14} \cong 3.74$

**41. தீர்வு :** $x^2 - 2\left(\frac{3}{5}\right)x =$

$x^2 - 2\left(\frac{3}{5}\right)x + \frac{9}{25} = \frac{9}{25} + \frac{2}{5}$

$\left(x - \frac{3}{5}\right)^2 = \frac{19}{25}$

$x - \frac{3}{5} = \pm\frac{\sqrt{19}}{5}$

$x = \frac{3+\sqrt{19}}{5}$ ; $x = \frac{3-\sqrt{19}}{5}$

**42. தீர்வு :** $ar^3 = 54; ar^6 = 1458$

$\frac{ar^6}{ar^3} = \frac{1458}{54}$

$r = 3 \Rightarrow a = 2$

தேவையான பெருக்குத் தொடர்வரிசை 2,6,18,54,.........

## பகுதி - IV

**43. தீர்வு :**

PQR ஆனது கொடுக்கப்பட்ட முக்கோணம் ஆகும். PQR என்ற முக்கோணத்தின் பக்கங்களுக்கு $\frac{7}{3}$ அளவுடைய ஒத்த பக்கங்களின் மற்றொரு முக்கோணத்தை அமைப்போம்.




**வரைதலின் படிகள்:**

(1) ஏதேனும் ஓர் அளவைக் கொண்டு $\Delta$ PQR ஐ வரைக.

(2) QR என்ற கோட்டுத்துண்டில் குறுங்கோணத்தை ஏற்படுத்துமாறு QX என்ற கதிரை P என்ற முனைப்புள்ளிக்கு எதிர் திசையில் வரைக.

(3) QX-ன் மீது $Q_1, Q_2, Q_3, Q_4, Q_5, Q_6, Q_7$ என்ற 7 புள்ளிகளை ($\frac{7}{3}$ ல் 7 மற்றும் 3 ஆகியவற்றில் பெரியது 7 என்பதால்)

$QQ_1 = Q_1Q_2 = Q_2Q_3 = Q_3Q_4 = Q_4Q_5 = Q_5Q_6 = Q_6Q_7$ என்றவாறு குறிக்கவும்.

(4) $Q_3R$ இணைத்து (3-வது புள்ளி அதாவது $\frac{7}{3}$ -ல் 7 மற்றும் 3 ஆகியவற்றில் 3 சிறியது என்பதால்) $Q_3R$ இணையாக $Q_7$ லிருந்து வரையப்படும் கோடு வரைக. இது QR ஐ R′ ல் சந்திக்கிறது.

orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000
Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

www.surabooks.com



$\Delta P'QR'$-ன் பக்கங்கள் $\Delta PQR$-ன் ஒத்த பக்கங்களின் அளிவில் 3-ல் 7 பங்கு ஆகும். $\Delta P'QR'$ ஆனது தேவையான வடிவொத்த முக்கோணம் ஆகும்.

(அல்லது)

**தீர்வு :**




$\Delta ABC$-யில் $DE \| BC$.

தேல்ஸ் தேற்றத்தின் மூலம் நாம் பெறுவது

$$\frac{AD}{DB} = \frac{AE}{EC}$$

$\frac{x}{x-2} = \frac{x+2}{x-1}$ லிருந்து $x(x-1) = (x-2)(x+2)$

ஆகவே, $x^2 - x = x^2 - 4$ எனவே, $x = 4$

$x = 4$ எனில், $AD = 4$, $DB = x - 2 = 2$,

$AE = x + 2 = 6$, $EC = x - 1 = 3$.

எனவே, $AB = AD + DB = 4 + 2 = 6$,

$AC = AE + EC = 6 + 3 = 9$.

ஆகவே, $AB = 6$, $AC = 9$.

**44. தீர்வு :**

**படி 1:** $y = x^2 + 3x - 4$ -ன் வரைபடம் வரைய கீழக்கண்ட மதிப்புகளை அட்டவணைப்படுத்தவும்

| $x$ | –4 | –3 | –2 | –1 | 0 | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| $x^2$ | 16 | 9 | 4 | 1 | 0 | 1 | 4 | 9 | 16 |
| $3x$ | –12 | –9 | –6 | –3 | 0 | 3 | 6 | 9 | 12 |
| –4 | –4 | –4 | –4 | –4 | –4 | –4 | –4 | –4 | –4 |
| $y = x^2 + 3x - 4$ | 0 | –4 | –6 | –6 | –4 | 0 | 6 | 14 | 24 |

(–4, 0), (–3, –4), (–2, –6), (–1, –6), (0, –4), (1, 0), (2, 6), (3, 14), (4, 24) ஆகிய புள்ளிகளை குறித்து பரவளையம் வரைக.




orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

www.surabooks.com



**படி 2:** $x^2 + 3x - 4 = 0$ ஐத் தீர்க்க, $y = x^2 + 3x - 4$ லிருந்து $x^2 + 3x - 4 = 0$ ஐக் கழிக்க வேண்டும்.

$$y = x^2 + 3x - 4$$
$$0 = x^2 + 3x - 4$$
$$(-)\ (-)\ (+)$$

$y = 0$ என்பது X அச்சின் சமன்பாடு

**படி 3:** எனவே $y = x^2 + 3x - 4$ என்ற பரவளையம் $x$ அச்சை வெட்டுபுள்ளிகள் $(-4,0)$ மற்றும் $(1,0)$ $x^2 + 3x - 4 = 0$ என்ற இருபடிச் சமன்பாட்டின் தீர்வுகள் ஆகும்.

**படி 4:** இப்புள்ளியின் ஆயத் தொலைவுகள் $-4$ மற்றும் 1 ஆகும்.

எனவே சமன்பாடு $x^2 + 3x - 4 = 0$ ன் தீர்வுகள் $-4$ மற்றும் 1.

(அல்லது)

**(b)** கொடுக்கப்பட்டது

A B C D

$$\frac{1}{3}(x + y - 5) = y - z = 2x - 11 = 9 - (x + 2z)$$

A மற்றும் B யிலிருந்து, $\frac{1}{3}(x + y - 5) = y - z$

$\Rightarrow x + y - 5 = 3y - 3z \Rightarrow x - 2y + 3z = 5$ ....(1)

B மற்றும் C யிலிருந்து, $y - z = 2x - 11$

$\Rightarrow 2x - y + z = 11$ ....(2)

C மற்றும் D யிலிருந்து, $2x - 11 = 9 - x - 2z$

$\Rightarrow 3x + 2z = 20$ ....(3)

$(1) \rightarrow \quad x - 2y + 3z = 5$

$(2) \times 2 \rightarrow 4x - 2y + 2z = 22$

$(-)\ (+)\ (-)\ (-)$

$-3x + z = -17$ ....(4)

$(3) \rightarrow \quad 3x + 2z = 20$

$3z = 3 \Rightarrow z = 1$

$\therefore$ (3) லிருந்து, $3x + 2 = 20 \Rightarrow 3x = 20 - 2 = 18$

$$x = \frac{18}{3} = 6$$

$\therefore$ (1) லிருந்து, $6 - 2y + 3(1) = 5 \Rightarrow 9 - 2y = 5$

$\Rightarrow 9 - 5 = 2y \Rightarrow 2y = 4$

$$\therefore y = \frac{4}{2} = 2$$

$\therefore$ தீர்வு தொகுப்பு $\{6, 2, 1\}$.

❁❁❁❁❁

orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com